DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

Name: ராமமூர்த்தி

Husband Name: சக்கரவர்த்தி

Village: ஆவாரகுப்பம்

Taluk:
Caste:
Calling:
Religion:
Age: 58

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 01.08.2023

O.S.No.55/2018 DW1

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

1. வாதிக்கு நான் ஏதேனும் சொத்தினை கிரையம் செய்து கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை உயில் எழுதி வைத்த சொத்தில் ஒரு பகுதி தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். நான் வாசு (எ) விஜயசங்கருக்கு நான் ஏற்படுத்தியதாக சொல்லும் அடமான பத்திரத்திற்கான கடனை செலுத்தி பத்திரத்தை திரும்ப வாங்கி கொண்டேனா என்றால் திரும்ப வாங்கி கொண்டேன். அந்த அடமான கடன் பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதேபோல டி.சி.ராஜேவேலு பெயருக்கு ஏற்படுத்திய கிரைய பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் அதுவும் என்னிடம் தான் உள்ளது. அந்த ஆவணங்களை ஒப்படைக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். (பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் மற்றும் டி.சி ராஜவேலு பெயரிலான கிரைய ஆவணம் ஆகியவற்றை எடுத்து வந்து ஒப்படைத்து சாட்சியம் அளிப்பதற்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா வழங்கப்படுகிறது).